கிறான். ஆகவே, எந்தக் காரியம் நடந்தாலும் பொது மக்களிடத்திலே பணம் வாங்குகிறபோது குழு போட்டு வாங்கும் வகையில் கொஞ்சம் பொறுப்பாகத்தான் நாம் நடந்து கொள்ள நேரிடுகிறது. ஆனால் சமீபத்தில் அறநிலையத்துறையிடமிருந்து, ஆலயங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருப்பணி செய்ய பொது மக்கள் யாராவது முன் வந்தால், அவர்களுடைய ஆர்வத்தைக் குறைக்கின்ற வகையில் சட்ட விதிகளைக் காட்டி மிரட்டாதீர்கள், தடுக்காதீர்கள், என்று சொல்லப்பட்டிருக்கிறது.

புதியதாக வீடுகள்கட்டிடங்கள் கட்டும்போது மரங்கள் நடும் திட்டம்.

103 *வினா எண்.—12364—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் புதிதாக வீடுகள், கட்டிடங்கள் கட்டும்போது மரங்களையும் கண்டிப்பாக நடவேண்டும் என அரசு நிபந்தனை விதிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். வனத்துறையின் ஆலோசனையை ஏற்று அதற்கான சட்டத்திருத்தம் கொண்டு வர ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை முயற்சி எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் புதிதாக வீடுகள். கட்டடங்கள் கட்டும்போது மரங்கள் நடவேண்டும் என்று சட்டங்கள் இருக்கின்றன. அப்படி நடவில்லையென்றால் அவர்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது. அந்த மாதிரி நடவடிக்கைகள் நம் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்தப்படுமா? அதுமட்டுல்ல. ஒரு குழந்தை பிறந்தவுடனே ஒரு மரம் நட்டு விட்டுத்தான் முனிசிப்பாலிட்டி அல்லது நகராட்சியில் பிறப்புபதிவு செய்யவேண்டும் என்ற சட்டத்தையும் அரசாங்கம் இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்த விவரத்தை இந்த அவைக்குத் தெரிவிப்பதற்கு அவர்கள் இந்தக் கேள்வியைப் பயன்படுத்திக் கொண்டதற்காக மகிழ்ச்சி. அமெரிக்கா நாட்டில் அவர்கள் கண்டுவந்திருக்கிற விவரத்தை இப்போதுதெரிவித்திருக்கிறார்கள். நாம்இதை சட்டத் துறைக்குத் தெரிவித்து அவர்கள் தயாரித்துக் கொண்டிருக்கிற அந்தச் சட்ட முன்வடிவிலே இதையும் இணைக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒரு மரம் நடுவது என்றால் பூமியில் மக்களுக்கு இருக்க இடம் இருக்குமா?

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் முதல் கேள்வி கேட்கும்போது ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒரு மரம் நடவேண்டுமென்று சொல்லியிருந்தேன். அதையும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா? அதுமட்டுமல்ல, இப்போது நம் சென்னை மாநகராட்சியில் மட்டுமல்ல, எல்லாயிடங்களிலும் வீடுகளிலும் மற்றும் தெருக்களிலும் மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் சில நேரங்களில் மாடுகளை மரத்தில் கட்டிவிடுகிறார்கள் மரத்திலுள்ள குச்சியை ஒடித்துவிட்டு செல்கிறார்கள். ஆகவே மரங்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. ஆகவே மரங்களைப் பாதுகாப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. மரம் நடுவதற்காக குழந்தை பெற வேண்டும் என்று அவ்வளவு பெரியதொரு சுமையை நம் நாட்டின் மீது சுமத்த வேண்டாம். குழந்தைகள் பெறாமலேயே மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்பதுதான் இப்போது மிகப் பெரிய கடமையாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட முயற்சிகள் அரசாங்கத்தால் வனத்துறை மற்றும் பல்வேறு துறைகளால் எடுக்கப்பட்டு வருகின்றன. மாட்டைக் கட்டுகிறார்கள் கிளையை ஒடிக்கிறார்கள் என்பதெல்லாம் பொது மக்களாகப் புரிந்து தடுக்க வேண்டிய ஒன்று, அதைச் சட்டம் போட்டு மாத்திரம் தடுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அப்படிப்பட்ட உணர்வுகளைப் பொது மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, சிலயிடங்களில் அறுபது, நூறு ஆண்டுகளான மரங்களையெல்லாம் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெட்ட அனுமதி கொடுக்கிறோம். ஒருவர் பத்து மரக்கன்றுகளை நட்டால்தான் அந்த மரத்தை வெட்ட அனுமதி அளிக்கப்படும் என அரசு அணையிடுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. பல்வேறு நிலைகளில் இந்த மரங்களை வெட்டுவதற்காக அனுமதி கொடுக்கப்படுகிறது. தனியார் காடுகள் அல்லது தனியார் தோட்டங்கள் என்றிருந்தால் அவர்கள் முறையாக அனுமதிக்காக விண்ணப்பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பிக்கிறபோது வயது முதிர்ந்த மரங்கள் என்று கணக்கிட்டு ஒரு குறிப்பிட்ட அளவு வெட்டலாம் என்று அனுமதித்தால் அவர்கள் உடனடியாக வெட்டப்படுகிற மரத்திற்குப் பதிலாக மரம் நடவேண்டும். அதற்கு இணைத் தொகையாக பணம் கட்ட வேண்டும் என்ற விதியெல்லாம் இருக்கிறது. அரசாங்கத் துறைகள், வருவாய்த் துறை, அல்லது நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித் துறை, கிராமப் பஞ்சாயத்துத்துறை போன்ற பல்வேறு துறைகளால் மரங்கள் வெட்டப்பட்டால் அப்போது இந்தச் சட்டதிட்டங்களுக்கு அவர்கள் உட்படுவதில்லை, உட்படுத்தப்படுவதுமில்லை,